உ

சிவமயம்.

அகத்திய முனிவர்

அருளிச்செய்த

வைத்தியபூரணம

உ௱௫.

இஃது,

திருவனந்தபுரம்,

பாலசுந்தரபண்டிதரவர்கள்

பேருதவியைக்கொண்டு.

திருமயிலை,

வைத்தியலிங்கதேசிகரவர்களால்

பிழையறப்பரிசோதித்துத்

தி - ஜெகநாத முதலியா

ரவர்களால்.

தஞ்சாவூர்,

கன்விநாயசெட்டியா

ரவர்களது,

இந்துவித்தியாநிலய அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1865.

ஸ்ரீ ஆர்.ராமசாமிநாயுடு புத்தகம்

கடவுடுணை.

அகத்தியமுனிவர்

அருளிச்செய்த

வைத்தியபூரணம்-உ௱௫.

காப்பு.

ஆதிமுதற்பூரணமாம் பொருளைப்போற்றி... *
அம்பிகையினடிபகது மல்லும்போற்றி ... *
ஜோதிமிகுங்காரணசற் குருதாட்போற்றி... *
சொலற்கரியநாதாக்கள் துணைத்தாட்போற்றி...*
வேதன்மகிழ்கலைவாணி சரணம்போற்றி... ...*
வேதாந்தவிளக்கொளியின் கமலம்போற்றி... *
நாதமிகுமாருதா ரத்தாட்போற்றி... ... ...*
நளினமிகுங்கணபதி பூரணத்தாட்போற்றி... *

பிணிக்குறிப்பு.

பூரணமாய் மும்மூலம் பொறியிற்கூடாம் - புகையெழும்பி மேகத்தாற் சிரசிற்கூடாங், காரணமாய் நீர்கலந்து கனரோகங்கள் - கனன்றெழுந்த வாய்வதனாற் சூலைரோகம், வாரணமாய் வாதத்தி லெழுந்தரோகம் - மத்தியமாம் பித்தத்திற் கிராணியாச்சு, தாரணமாம் வாய்வதனாற் குன்மமாச்சு - சார்ந்திடவேசிலேற்பனந்தான் ஜயமதாமே...(க)

ஆமப்பாவாதத்தா விரணமுண்டா - யஸ்தியினிற்கூடுகொண்டாற் சுரங்கள்காணுங், காமப்பாலாகிரியால் மேகமுண்டாங் - கைக்கடந்தபோகத்தால் ரோகமாச்சு, தாமப்பாமேகத்தாற் பிறந்தரோகந் - தரணியினுலாயிரத்துச் சில்வாணந்தா, ஞேமப்பாமேகங்க ளிருபத்தொன்று - லுலகத்தில்நீரிழிவ துதித்தவாறே... (உ)

வாருன பித்தத்தா லாஷீணரோக - மருவியதோர் வாதத் தாற் சீதரோகந், தேருதவையத்தாற் கபரோகந்தான் - திரண்டெ ழுந்தவாயுவினுன் மூன்றுமாச்சு, கூருனதசவாய்வு தொந்தங்கொ ண்டு - கொடியகனல் வாதமுடல்விந்துமாகி, யேருதவிந்ததனிற் பிறந்தமேக - மெழுந்தபித்த சிலேர்ப்பனத்தி லிருந்ததாமே(௩)

ஆமிந்தநூற்குநிகர் சஞ்சீவியாகு- மறிந்தநூல்தனைப்பார் த்தாற் சித்தர்க்கொப்புப், போமேகேள் நூல்கண்டால் நோய்க ளெல்லாம் - பொன்வெள்ளி ரண்டுமிந்த நூலுக்குள்ளே, நாமப் பாறனுக்கத்தை யார்க்குச்சொன்னே - நல்லோர்க்குத் தருமம து நாட்டவேணு, மோமிந்த நூல்பார்த்து வயித்தியஞ்செய்தா - னுத்தமனேபிர்மரிஷிக் கொப்பாங்காணே.................. (௪)

காணப்பாமிக்க மூலிகையினாலே - கட்டானகிரதங்கள் சூர ணங்கள், பூணப்பா தைலங்கள் பர்ப்பந்தானும் - பூட்டினேன்ர சாயணங்கள் கியாழத்தோடு, தோணப்பா சுளுவுமெத்த வுலகத் தோர்க்குச் - சொல்லவில்லை நூல்போலச் சுருக்கமில்லை, நாணப் பாவருணனைப்போற் செந்தூரங்கள் - நாட்டுகிறேன் வெகுலேசு நல்முறைக்கேளே....................................... (௫)

கேளப்பா தயிலங்கள் செந்தூரங்கள் - கெடியான சித்த ருக்குஞ் சிவயோகிக்கும், வாளப்பாவுலகத்திற் பண்டிதர்க்கும்- வழுத்தினே னிருநூற்றியைந்தினுள்ளே, நாளப்பா சத்தியமாய் ரோகந்தீர- நாட்டினேன் முந்நூற்றி லசாத்யப்போக, வேளப்பா விந்நூலை வைத்துக்கொண்டு - வேணடிவயித்தியத்தை விருப்பி ச்செய்யே.. (௬)

செய்வதற்குவெகுசூட்சஞ் சொல்லிவிட்டேன் - செகத்தி லேபிழைப்பதற்கே யெளிதாமிந்நூல், கைவசத்தில்வந்தமுதற்சில வுமில்லைக் - கண்டுமற்றப் பெரியோர்க்கு மெளியோர்க்குந்தான், மெய்யினுள்ளவினைகளெல்லா நீங்கிப்போக - வீண்சாஸ்திரமாய் ந்தவர்கள் மயங்கிப்போவார், நெய்மிகுந்தபால்போலே செந் தூரங்க - ணிகழ்த்துகிறேனிசமாகப் பர்ப்பந்தானே......... (௭)

பர்ப்பமாகின்றவகை யதனைக்கேளு- பாடினேன்பல்நூலுட் காரசாரஞ், செப்புகிறேன் மூலிகையி லீறிற்றுனல் - சிட்டனுக்கு

மனத்தெளிவு கனல்தான்கொள்ளா, தெப்போதுமுண்டுவரப் ப யமேயில்லை - யிந்நூலை யெளிதாக வியம்பவேண்டாம், நுப்பவ கையென்னாலிற் றப்பாதப்பா - நுணுக்கமாய்ச்செய்தொழிலினு ண்மைபாரோ.. (அ)

லோகபர்ப்பம்.

நுண்மைபெற அயத்தகடு நெற்கனந்தா - னுணுக்கமாய்ச் சாணகல்ஞ் சாண்தானிளம், வண்மையாய்விழிவேர் பலந்தானெ ன்று - வாட்டியேமெழுகுபோலரைத்துப்பூசித், தண்மையாயோ ட்டில்வைத்து யோடுமூடிச் - சந்துவாய் சீலைசெய்து கெஜபுடத் தில், உண்மையாய்வைத்திடவே பர்ப்பமாகு - முயர்ந்த திருநீறு போற்காணுமென்னே.. (கூ)

என்னவேயிதையெடுத்து வைத்துக்கொண்டே - யெலுமிச் சம்பழமதனை நான்காய்க்கீறி, யன்னவேபழம்பத்துச் சட்டிலி ட்டே - யதிலேதான்கையாஞ்சார் நாழிவாரு, பன்னவேகாடி யறு நாழிவிட்டுப்- பருவமாயவித்துலர்த்தி யெடுத்துக்கொண்டு, தின் னவே பணவிடைகள் தீற்மருன்றிற்முன் - நீருமடா பாண்டுவகை சேருநோயே.. (ய)

சேருநோய்குறைநோயுங் குட்டஞ்சூலை- தேனதனிற்கொ ண்டிடவே தீருந்தீரும், பாருநோய்தீர்ப்பதற்குக் காந்தந்தனி ற்-பர்ப்பத்தைச்சொல்லுகிறேன் பணிவாய்க்கேட்பாய், யாருமே செய்வதற்குச் சிறியாநங்கை - யமரிவிட்டிடித்திந்தச் சாற்றைவா ர்த்து, நீருதான்வற்றவற்ற வரைத்துமூன்று - நிசமாகப்பில்லைசெ ய்து ரவியில்வைத்தே.. (யக)

வைத்தபில்லைக்காய்ந்தபின் யோரோடுமூடி - வளமாகச்ச ந்துவாய்ச் சீலைசெய்து, வைத்தபில்லைக்கெஜபுடத்தி னீறிப்போகு ங் - காந்தத்தின்பெருமைதனைக் காட்டொணுது, சுத்தமுள்ளகிரா ணியொடு சோகைதீரச் - சொல்லுவோமாதளங்காய்ச் சாறுவார்த் து, மெத்தெனவேசுக்குதனை யரைத்துக்கிண்டி - மிதமாகக்காந்த பர்ப்பம் பணவிடைதான்கொள்ளே.. (யஉ)

கொள்ளவேமண்டலத்திற் றீரும்பாண்டு - கொடிதானஜல க்கழிச்சல் பிறமேகங்கள், தள்ளவே நீர்க்கிரிசிக் கருபானங்கேள்-

சஞ்சீவிசூரணத்தாற்சாந்தமாகும், உள்ளபடிமூலமொடு கிராணி
க்கெல்லா - பூலோகபர்ப்பங்காந்தபர்ப்ப மிரண்டிற்கூட்டி, வள்
ளலேகாந்தாரி சூரணத்தில் - வைத்திடவேதீரும்நோய் மகிழ்ந்து
கேளே...(௰௩)

தாம்பரச்செந்தூரம்.

கேளப்பாதாம்பரத்தின் துட்டுவாங்கிக் - கிருபையுடன்நே
ர்கனமாய்த் தகடுதட்டி, வேளப்பா வாடுதொடா மூலிவேரும் -
வெண்ணொச்சிவேரிரண்டுஞ்சமனாய்ச்சேர்த்து, நாளப்பாகுக்கில்
பா லதனுலாட்டி - நலமாகத்தகட்டின்மே லப்பிப்பின்னுஞ், சூள
ப்பாவோட்டில்வைத்தே யோடுமூடிச் - சுகமாகச்சந்துவாய்ச் சி
லைசெய்யே .... (௰௪)

சீலைய துமூன்றுசெய்து கெஜப்புடத்திற் - சேர்த்திடவே ய
ருணன்போற் செந்தூரந்தா, ஞாலையாகுல்மமெட்டுந்திரவேண்டி-
யஷ்ட சூரணத்துடனே தேனுங்கூட்டிக், காலையொடு மாலையிலுங்
கொள்வீராகிற்- கானுதுவாயுவர்க்கமெல்லாம்போகுஞ், சூலையெ
ன்றகுன்மவகை தீரவேண்டிச் - சுருக்காக விரசபர்ப்பஞ் சொல்
கிறேனே.. (௰௫)

இரசபர்ப்பம்.

சொல்கிறேன் ரசந்தன்னைச் சுத்திசெய்து - சுகமாகக் கரந்
தைச்சார்விட்டேயாட்டி, யல்கிறேன்மூன்றுநாளானாத்தபின்னை-ய
டைபோலத்தட்டித்தன்னையுலரவைத்து, மல்கிறேனோட்டினில்வைத்
தோடுமூடி - வளமாகச்சந்துவாய்ச்சீலைசெய்து, நல்கிறேன்குக்கி
டத்தில்மாண்டுபோகு-நஞ்சானபணவிடையிற்சூலைபதினெட்டே .

பதினெட்டுக்குஷ்டமனாயாட்புக்கிரந்தி - பரங்கிக்குப் பண
விடையிற்பன்னவெல்லத்தி, லெதிரிட்டனேய்சயங்களெல்லாந்தீரு-
மீறைந்துநாட்கொள்ளு மிருநேரந்தான், சதிரிட்டமேகவகை தீர
வேண்டிச்- சாற்றுகிறேன்வங்கபற்பஞ்சார்ந்துநீகே, ளதிரிட்டவெ
ள்ளீயக்கட்டிவாங்கி-யப்பன்னை நேர்கனமாயடித்துக்கொள்ளே ()

வெள்ளீயபர்ப்பம்.

அடித்திட்டத்தகடதுவே பலந்தானென்றே - யாடு தொ
டாமூலிமேவர்பலத்தானென்றே, துடித்திட்ட வெண்தோன்றிக்கிழ

ந்துமொன்றே- சுகமாகவனாத்ததனைமேலேயப்பி, வெடித்திட்ட
வோட்டில்வைத்தேயோடுமூடி- வெண்மையாய்கெஜபுடத்தில்வெ
ளுத்துநீரும், வடித்திட்டமேகவகையிருபதுக்கும்- வைத்திடவேப
ணவிடைதான்மருவிக்கொள்ளே.............................(௰௮)

மருவியதோராவிளைப்பஞ்சாங்கம்வாங்கி - மைந்தனேதே
ன்விட்டுமத்தித்தேதா, னிருபொழுதுகொண்டிடவே நீர்ச்சுரப்பு-
மியலானகல்லடைப்புக்கிரிச்சினங்க, ளருவியென்றசதையடைப்
புபிறமேகங்க-ளனுபானமறிந்துசெய்தாலகன்றுபோகும், கருவி
யென்றகாரீயப்பர்ப்பங்கேளு-கருதரியநொச்சியிலைகவசமாக்கே.

காரீயபர்ப்பம்.

ஆக்கியதோர்வெள்ளீய பர்ப்பம்போலே- யழகாகப்புட
ம்போடவெந்துநீறுந், தூக்கியதோர்சூலையொடு குட்டந்தீருஞ்-
சுனைப்புள்ளக் கிரந்திபிறமேகந் தீருந், தேக்கியதோர் திரோகத்திற்
காந்தல்தீருஞ்- சீரற்ற நீர்க்கடுப்பு வரக்ஷிதீரும், பாக்கியமாந்தேக
த்திலூக்ஷிணமெல்லாம்- பறக்குமடாகாரீயப்பர்ப்பத்தாலே (௨௰)

வெண்கலபர்ப்பம்.

பர்ப்பமாம்வெண்கலத்தைச்சொல்லக்கேளு- பசளையிலைத
னையரைத்துக் கவசஞ்செய்திட், டர்ப்பமாயெண்ணுதேயோட்டி
ல்வைத்தே - யழகாகக்கெஜபுடந்தா னறிந்துபோடு, நுர்ப்பமா
ய்நீறியது வெள்ளையாகு - நுணுக்கமடாபணவிடை நெய்தேனிற்
கூட்டி, யுர்ப்பனமாய்க்கொண்டிடவே சூலைபோகு- முறப்பான
குன்மமுடன் வாய்வுதீரும்..................................(௨௧)

திருமேஜயரோக மிருமல்மாந்தை - சிவசிவா சொல்வேன்
வெண்கலத்தினேர்மை, யூருமேயிருக்கின்றோர்க்கிந்நூற்கிட்டில்-
யோகவான் வயித்தியத்துக் காதியாகும், பாருமே யிம்முறையை
யறிந்துசெய்தால் - பர்ப்பத்தினருமையெல்லாங்காணலாகு, மா
ருமேசெய்வதற்கீ தறிந்துசொன்னே - னந்தந்தநூற்றேடி யலைய
வேண்டாம்..(௨௨)

துராப்பர்ப்பம்.

அலையாமலின்னமொரு சேதிகேட்பா - யாச்சரியந் துரா
வினிட வதிசயந்தா, னிலையான தும்பையிலை யதனைப்பூசி - யிட்

டுவிடுகெஜபுடமே யோட்டில்வைத்து, நிலையானதிராத்தகடு நீறிப்போகும் - நீர்க்கிரிச்சி வண்டுகடி சிலவிஷங்கள், குலையானகுன்மங்கள் ஜயரோகங்கள்- குஷ்டமொடுசூலை பதினெட்டும்போமே()

பித்தளைபர்ப்பம்.

எட்டாதநிலவாகைச் சூரணத்தி - லினித்தேன்சேர்த்தொருநாளே யிருநேரந்தான், முட்டாமற்பத்துதினங் கொள்வீராகில் மோசமில்லை நோய்களெல்லா மறிந்துநீங்கும், கட்டாதபித்தளையின் பர்ப்பங்கேளு - காஞ்சொரியின்வேரரைத்துக் கனமாய்ப்பூசி, வட்டானவோட்டில்வைத்தே யோடுமூடி - வைத்திடுவாய்க் கெஜபுடத்தில் மாண்டுபோமே............................... (உச)

மாண்டுபோம் நோய்கடனைச் சொல்லக்கேளு- வாய்வோடுகுன்மமுதல் கிராணிமூலம், பாண்டோடு நீர்ச்சுரப்பு வாய்நீரோடல் - பாய்கின்ற குடல்வாய்வு பார்சவாய்வு, ஆண்டதொருவானந்த வாய்வுகொண்ட - வதுபானநோயதனலறிந்துகொள்ளும், பூண்டநல்லவொழுகறையைச் சொல்லக்கேளு - புகழானபர்ப்பமொன்று புகலுவேனே.............................. (உரு)

ஒழுகறைபர்ப்பம்.

புகலுவேன்கஸ்தூரி யரைத்தேயப்பிப் - போட்டிடவே கெஜபுடத்திற்பொருமிநீறு, ஜெகதலங்கள்மெச்சுமடாவிந்தநீறு - தேசத்திற்பண்டிதர்க்குக்கிட்டுமோசொல், அகலாதபாண்டோடு வீக்கஞ்சோகை-யப்பனேயகோதர நீராம்பலோடே, யிகலாதநோயதனுக்கநுபானங்கே- ளிட்டிடுவாயிஞ்சித்தேனிரண்டினாலே(உசு)

பால்கருடக்கல்பர்ப்பம்.

நாலான நாடனிலே வாங்கிப்போகு- நரைதிரைபு மில்லையடாநமனும்வாரான், சோலாகச்சொல்லவில்லை பர்ப்பஞ்செய்யத்தொழிலாளிநீயானற்செய்துபாரு, பாலான கருடக்கல் நீற்றக்கேளும்- பவிஷுகெட்ட பண்டிதனே நீற்றப்போறன்- நூலானநூற்களெல்லாம் பார்த்தாலென்ன, நுணுக்கமாயிந்நூலை நோக்காய்நாயே..(உஎ)

நாய்போலேதிரிந்தலைவான் வயித்தியஞ்செய்ய- நளினமுள்ள வகையொன்று மறியமாட்டான், பேய்போன்றவுலகத்திற்பி

ணியைத்தீர்க்க - பெருநூற்கு'முதல்வருமோ பேயரோகேள், வா யானவானைப்புல் கிழங்கனைத்தே - யப்பியிடு கெஜபுடத்தி னீறிப் போகும், நோயானவூஷ்ணரோ கங்களெல்லா - நூகரவே யிருநே ரம் வெண்ணெயாமே. .... (உஅ)

வெண்ணெயிலேதானருந்த கனரோகம்போ- மெய்யெல் லாங் குளிர்ச்சிதருந் தெளிவுண்டாகும், எண்ணெயிலேதானருந்த கடுப்புதீரு-மெலும்புருக்கியுள்வாட்சியேகுமேகு, முண்ணயிலே யஸ்தியுடசுரமுந்தீரு - முள்ளுருக்கியுள்ரோகமுலர்த்தல்போகும், பண்ணவேபால்கருடப் பர்ப்பத்தாலே - பறக்குமடா வெட்டை யெல்லாம் பாருபாரே. .... (உகூ)

கல்நாருபர்ப்பம்.

பார்ப்பதற்குக் கல்நாரின் பர்ப்பங்கேளு - பகருகிறேன் கோங்கிலவம்பட்டைவாங்கி, யார்க்கவேயிடித்ததனைவைத்தேயோ ட்டி - லதன்மேலே கன்னுரை நடுவேவைத்து, வேர்ப்பொழியும் பட்டைபொடி மேலேபோட்டு - மேலோடுமூடியல்லோ சீலைசெ ய்து, மூர்க்கமாங்கெஜபுடத்திற் போடநீறு - மூதண்டகன்னுரின் முறையைக்கேளே. .... (௩௰)

முறையானபர்ப்பத்தைத் தேனிற்கொள்ள - மூட்டோடே பசைந்தபல் லிறுகிப்போகு, மறையானசேட்டுமத்தையறுத்துப் போடு - மகலாத வூஷ்ணத்தை யடக்கிப் போடும், பிறையானநா ளொன்றுக் கிருபோதுண்ணப் - பேரானசயமிருமல்சுவாசகாசம் நிறையானமந்தார காசமேகும் - நேரானதூதுளைலே கியத்திலெ ன்னே. .... (௩க)

நாகபர்ப்பம்.

என்னவேநாகபர்ப்பத் தியல்புகேளு - மெலியாலின் பாலி லரைத்திடுகெஜந்தான், பன்னவே ரவியுலர்த்திக் காய்ந்தபின்னைப்- பரிவாகவோட்டில்வைத்துச் சீலைசெய்து, முன்னமே சொன்னப டி புடத்திநீறு- மூதண்டபர்ப்பத்தின் முக்கியக்கேள், வன்னமாங் கிராணியொடுமூலரோகம் - வயிறெரிவுநெஞ்செரிவுவாய்வுரோகம்.

வாயுவுடனிதற்கெல்லா மனுபானங்கேள் - வரிசையுடன் தி ரிகடுகு திரிபலாதி, தூயதிலே லகிரிகஞ்சா பொடித்துச்சேர்த்து-

தோய்தேனிற்றூவிமெள்ளப் பதமாய்க்கிண்டி, நோயதனை யறிந் துண்ண மண்டலந்தா - னூற்பாக முன்சொன்ன ரோகந் தீரும், பாய்கின்ற வெள்ளியுட பர்ப்பங்கேளு - பாருற்ற ரூபாயை வாங் குவாயே. .... (௫௩)

வெள்ளிபர்ப்பம்.

வாங்கியேசெம்முள்ளி யிலையரைத்து- மகிமையொடுகவச மதாய்ச்செய்துக்கொண்டு,தேங்கியேரூபாயைக்குகையில்வைத்து சில்லிட்டுச்சீலைசெய்து முமுட்புடத்திற், பாங்கியேயிட்டிடவே நீ றிப்போகும்- படுபாவிவெள்ளியது பர்ப்பமாச்சே, யோங்கியே சிமிளுக்குட் பதனஞ் செதே - யுறவுகெட்ட குன்மமுட நீர்க்கட் டெல்லாம் .... (௫௪)

நீர்க்கட்டுச்சதையடைப்புமயக்கமோடு- நெஞ்சிலுள்ளகப மெல்லாநீங்கிப்பேகு, மூர்ச்செறியுமூச்செல்லா மடங்கிப்போகு மூக்கிலுள்ளநீர்ப்பாச்சற் பீனிசங்கள், பார்மண்டை சூலையொடு புரைகள்புண்கள் - பதுங்கிவிடும்வெள்ளியிட மகத்துவத்தான், ஆ ரிந்தபர்ப்பத்துக் கனுபானங்கேள் - ஆஆஆவமுக்கிராகு ரணந்தா னுமே. .... (௫௫)

தங்கபர்ப்பம்.

ஆமிந்தத்தேனிலிடு மண்டலந்தா - னகலாதநோய்களெல் லா மகன்றுபோகு, மோமிந்ததங்கபர்ப்பஞ் சொல்லக்கேளு-மு றுதியுள்ளதங்கக்கா சதனைவாங்கித், தாமிந்தப்பனிநாக்கி மூலிதன் னைச் - சாந்துபோலரைத்தப்பி யோட்டில்வைத்து, வாமிந்தச்சந் துவாய்ச்சீலைசெய்து-வைத்திடவேகெஜபுடத்திற்பர்ப்பமாச்சே()

ஆச்சிந்தபர்ப்பத்தையெடுத்துக்கொண்டே-யளவிறந்தவி த்தைதனை யாடுஆடு, பாச்சிந்தவகையறிந்து வேதைதன்னை - பாய் ச்சிளுலேழுரைத்தான்காணுங்காணும்,வாய்ச்சிந்தச்சொர்ணபர்ப்ப வியாதிக்கெல்லாம் - வகையறிந்தே யநுபான மறிந்துகூட்டுக், கா ய்ச்சிந்த வநுபானஞ் சொல்லக்கேளு - கண்டாத்திரி லேகியத்திற் கொண்டிடாயே. .... (௫௭)

கொண்டாக்காற் சேட்டுமங்க டொண்ணூற் ருறுங் - குடி போமேன்றுசொல்லி கூட்டோடேபோங், கண்டாக்கால்சய

ரோகங் காசிரோகங் - கபமீளை யுண்மாற்தை கட்டோடே போம், உண்டாக்காற்றிரிகடுகு லேகியத்தி - லுறவுகெட்டகுன்மமொடு ம கோதரங்கள், சென்றாக்கால் வாயுநீ ராம்பல்சூலை - சிரசுநோய்க் கண்ணோயுந் தீரும்பாரே .... (௫௯)

நீருமேகுட்டமொடு குறைநோயெல்லாந் - திறமாக லேகி யத்திற் கொண்டிட்டாக்கால், பாருமேசூலையொடு கிரந்திகுட்டம் பறக்குமேதேனிலிரு பதுநாளுண்டாற், றேருமேநீரிழிவுபிறமே கந்தால் - றெளிவாகச்சிந்திற் சூரணத்திலுண்ண, வாருமேநெல்லி க்காய் லேகியத்தில் - வைத்துமெள்ளக் கொண்டிடவே பித்தம் போமே. .... (௫௰)

போகுமேசிவவேம்பின் சூரணத்திற் - புகட்டவே புண்பு ணகள் சிலவிஷங்கள், ஆகுமேவண்டுகடி விடங்களெல்லா - மாச் சரியம்வேம்பின்சூ ரணத்திற்கொள்ள, வேகுமேவாதமென்ற வெ ண்பதுந்தா - னெடுத்தடுத்த நோய்களெல்லா மேங்கிப்போகும், வாகுமேயனுபானம் அறிந்துசெய்தால் - வருகின்ற நோய்தீருஞ் சொர்னமாமே.. ...... (௬௰)

சொர்னமதுதின்றாக்காற்செர்னம்போலாஞ்-சுகமாகவிரு ம்புதின்றாலிரும்புபோலா, மற்பமாமன்னமுண்டா லழிந்துபோ கு- மாசையதுமிகுத்தாக்காற்பிறவிதீரா, வர்னமது பிரிந்தாக்கால் வலுமைபாழா- மாநிலத்திலிருந்தாக்காற்றவசுபாழாம், வர்னபொ ன்னைமறந்தாக்காலெந்தப்போக்கு- மாகாதிவ்விதமாகப்பொன்னை நீற்றே.. (௬௧)

கந்தகபார்ப்பம்.

நீற்றுதற்குப்பின்னுமொருசேதிகேளு-நேராககெந்தகத்தி ன்பற்பஞ்சொல்வே, னேற்றுகின்றசிறுசின்னிதனையரைத்தே-யெ லுமிச்சங்காய்பளவாய்க்குகையேசெய்து, தோற்றுகின்ற ரவியதனி ற்காயப்போட்டுச்- சுகமாகவுலர்ந்தபின்புசொல்லக்கேளு, சாற்று கின்றகெந்தகத்தின்கட்டிவாங்கித்- தூளாான குகைக்குள்வைத்துச்சி ல்லுபோடே.. (௬௨)

சில்லிட்டுச்சீலைசெய்துகுக்குடத்திற்- றீர்ந்தாறியெடுத்துப் பார்ஜெயபற்பந்தான், மல்லிட்டுவாதாடிவந்தநோய்கள்- மயங்கி

யேயோடுவதற்கநுபானங்கே, ணெல்லிட்டநெல்லிடைதான் றே னிற்கொள்ள- நிலையானகுஷ்டமொடு குறைநோயெல்லாம், பல் லிட்டுக் கடித்ததொரு சிலவிஷங்கள் - பாரித்தவாய்வோடுவாதம் போமே..(௬௩)

வாதத்தினுலெழுந்தகிரந்திசூலை- வயிற்றுவலிநீர்ப்பொருத் தமகோதரங்கள், சூதத்தால்வந்ததொருகற்பரோகஞ்- சுழற்றியே யாற்றிவிடுங்கண்டாற்போலே- பாதத்தில்விக்கமுள்ளபாண்டுரோ கம்-பறக்குமப்பாபர்பத்தாற்பாருபாரு,தாதுற்றவிடுப்புவலிசந் துவாதந்-தசையிலுள்ளநீரெல்லாமற்றுப்போமே......... (௬௪)

மண்டூரபர்ப்பம்.

அத்ததொருமண்டூரபற்பஞ்சொல்வே - னதிகமாஞ்சொ ரிசுணங்கையரைத்துப்பூசி, வைத்திடவேமண்குகையில்சில்லுபோ ட்டு- வளமாகசிலையொன்றுவாயில்செய்து,பத்தியுடன்கெஜபுடத்தி ற்கூகைநீறின்- பரிவதுபோல்கண்மணியேநீறிப்போகும், புத்தியு டனிதையெடுத்துவைத்துக்கொண்டு-புனிதமாய்த்தேனதிலேபொ சித்திடாயே.. (௬௫)

பொசித்திடவேபணவிடைதான்றேனிற்கொள்ளப்- போ ரற்றபாண்டுவகைபொல்லாவிக்க, நசித்திடவேபண்ணுவிக்குமண் டூரந்தா- னுடாதுசயரோகமந்தாரகாச, மூசித்திட்டவிஷப்பாகம் விஷநீரெல்லா- மூட்டோடேபிடுங்கிவிடுமூர்க்கமெத்த, வுசித்திட் டவஞ்சனக்கல்பற்பஞ்சொல்வே - னுருபிடியாஞ்சிறுசீனாகுகை யைப்பண்ணே..(௬௬)

அஞ்சனக்கல்பர்ப்பம்.

பண்ணியந்தவஞ்சனக்கல்நிறையவிட்டுப்-பரிவானமூலிகை யையரைத்துமூடி, யொண்ணியமண்சீலைசெய்துகெஜபுடத்தி-லு றுதியுள்ளசங்கதுபோல்நீறிப்போகுந், தண்ணியிலேபோட்டவுட ன்மிதக்கும்பாரு- ஜலமானமேகவகையிருபதுக்கு, மெண்ணியே தேனிலிடுவியாதியானு - லென்னசொல்வேன்நீர்போன போக்குத் தானே..(௬௭)

தாளகபர்ப்பம்.

போக்கானதாளகத்தினீற்றைச்சொல்வேன்-புதியதலையோ ட்டதனைப்பொடித்துக்கொண்டு, நீக்கானசுண்ணும்புத்தண்ணீர்விட்

டு- நினைவாகத்தானனாத்துக்குகைபோற்பண்ணி, வாக்கானமேல்மூடியொன்றுசெய்து - வண்மையாய்க்காயவைத்தே யதனுட்கேளு, பாக்கானதாளகத்தின்கட்டிவைத்துப்- பரிவாகச்சீலைமண்செய்துலர்த்தே.. (௪௮)

உலர்ந்தபின்புகுக்குடத்தினீறிப்போகு - முத்தமனேதாளகத்துக்கொப்புமுண்டோ, மலர்ந்ததொருமல்லிகைப்பூபோலாம் வெள்ளை-மாசற்றநீரதனைவைத்துக்கொண்டே, யலர்ந்தமலர்த்தேனதிலேகொள்வீராகி- லரிதாலசயரோகமந்தாரகாசங், கலந்தகபமுள்மாந்தை யிருமலிளை - களாகடந்தே யோடிப்போங் கண்டுகொள்ளே... (௪௯)

கண்டுகொண்டேயநுபானமறிந்துசெய்தாற்- காணுதகடிவிஷிமுங்குறைநோய்குஷ்டம், வண்டுகடியேலிவிஷிங்களெல்லந்தீருமைந்தனேயநுபானமறிந்துபோடு, பண்டானஜாதிலிங்கந்தன்னைநாளும்- பற்பமாய்நீற்றுகிறபண்பைப்பாரு, யெண்டிசையிலுள்ளவரானீற்றப்போமோ-யெவருமெய்க்கநீறதனைச்செய்யக்கேளே.

சாதிலிங்கபர்ப்பம்.

செய்யதொருஜாதிலிங்கக்கட்டிவாங்கிச் - சிவமூலிவேர்பட்டைக்குகையைச்செய்து, வெய்யதொருகட்டியதில் வைத்துமூடி விதமுடனேசந்துவாய்ச் சீலைசெய்து, பையவேகுக்குடத்தி னீறிப்போகும்-பரிவுடனேநிறுத்துப்பாரிடைதான்போகா, துய்யவே நோயெல்லாந்தீரவென்றுற்-றுரையானவநுபானமொன்றுகேளே.

வேறு.

ஒன்றுதான்றேனிற்கொள்ளவுறுதியாங்குன்மவாய்வு, பண்டுள்ளஜன்னிவாதம்பாரிசவாய்வுசூலை, யென்றிடுமிளைதன்றேடினைப்பதும்விளைந்துபோகு,முண்டிடுமநுபானங்களுகந்துநீகண்டிடாயே... (௫௨)

வீரபர்ப்பம்.

உகந்திடும்வீரபற்பமுனைக்கிறேனுறுதியாக, ஜெகந்தனிலப்பையின்றன்கிழங்கிலைக்குகைபோற்செய்தே, யிகந்தனில்வீரந்தன்னையிசையவேயதனுள்வைத்துப், பகர்ந்திடுஞ்சில்லுமூடிப்பாகமாய்ச்சீலைசெய்யே... (௫௩)

செய்யதுகுக்குடத்தில்தீர்க்கமாய்நீறிப்போகு, மெய்யவே
பணவிடைத்தானியல்புடன் றேனிற்கொள்ள, வய்யதுசூலைகுன்ம
மகன்றிடும்வாய்வுபோகு,மெய்யிதுசொன்னேன்காரப்போக்கினை
விளைந்துகேளே.. (௫௪)

பொரிக்காரபர்ப்பம்.

விறைந்திடும் பொரிக்காரத்தில்கட்டியையமதித்துவாங்கி, பு
றைந்திடுஞ்சங்கைநீற்றியுகத்துநீர்விட்டரைத்து, நிறைத்திடுங்குகை
யாய்ப்பண்ணிநேர்ப்பொரிக்காரம்வைத்துக்,குறைந்திடுஞ்சீலைசெ
ய்துகுக்குடம்வைத்திடாயே.. (௫௫)

வைத்திடக்காரநீறும்வளர்தீதற்கநுபானங்கே, ணித்தமுந்
தேனிற்கொள்ளநீர்க்கடுப்புடனேமாறு, மெத்தெனஜலமிரங்குமி
சைந்தகல்லடைப்புந்தீரும், துத்திடுஞ்சதையடைப்புத்துறந்துநீ
ர்த்தோஷம்போமே.. (௫௬)

சாஸ்திரபேதிபர்ப்பம்.

போமெனசாஸ்திரபேதிபுகல்கிறேன்புனிதமாக,வாமென
சூலைப்பால்விட்டேயவ்விடையெருக்கம்பாலா, லாமெனநாலுஜா
மமதித்தரைத்துவடைசெய்து,நாமெனகுக்குடத்தினுட்டிடநல்ல
நீறே.. (௫௭)

நல்லதோரந்நீர்தன்னைநாட்டுவாயிஞ்சிச்சாற்றில், வல்லதோர்
கூழுந்திருமருவியபாலிற்கொள்ள, முல்லையினகையினாலேமுழுங்
கியசுரங்கள்போகும், வெல்லதோருஷ்ணமெல்லாம்விலகிடும்வெ
ன்மைதானே.. (௫௮)

வெண்குந்திரிக்கபர்ப்பம்.

வெண்மைகுந்திரிக்கநீற்றை விளம்புவேன்விரைந்துகேளு,
பண்ணிபின்பாலைவிட்டுப்பரிந்தரைத்துவடைசெய்தே, பண்ண
லேயோட்டில்வைத்தேபதிந்துமேலேயோடுமூடி, மண்ணதுசீலைசு
ற்றிவைத்திடுகுக்குடத்தில்.. (௫௯)

குக்குடந்தன்னிற்றானேகூகைநீறெரிப்பதாகு, மிக்கநீறதனை
வெண்ணெய்தன்னிலேயருந்துவீரேல், தக்கபற்கடுப்பிரத்தந்தான
துபறந்துபோகுஞ், சிக்குள்ளபுண்ணுந்தீருஞ் சிந்தையினுன்னிப்
போடே.. (௬௰)

போடவேபல்லினைவும்புண்ணெனுமனைத்திரைடுஞ், சூ
டதுகொண்டபுண்ணுஞ்சூலையின்ரணங்கள்போகு, மாடிடுந்தந்த
மெல்லாமாணிபோலுறுத்துநிற்குஞ், சேடுவெண்குந்திரிக்கஞ்செ
ய்திநித்திறங்கடானே.. (௬௧)

பவழபர்ப்பம்.

திறந்திடும்பவழபற்பஞ் செய்கிறதிறந்தால்கேளு, சிறந்த
தோர்முயலின்ரத்தந்தீர்க்கமாய்விட்டேயாட்டிக், குறைந்திடாயி
ல்லைசெய்துகுலசவியேயோட்டில்வைத்து, மறைந்திட வோடுமூ
டிவைப்பாய்குக்குடத்திற்றானே................................ (௬௨)

தானதுநீறிவெள்ளைச்சதுர்முகன்போலேயாகு, மானதோ
ர்நீறதன்னைப் பணவிடையநுபானக்கே, ளேனமாந்தேனிறை
தாதுளைநீரிற்கொள்ள, மானமாங்குழலினுளே சயங்கபமகன்று
போமே... (௬௩)

அகன்றிடுமிருமற்காசமதிகமாம்பவழபர்பம், புகன்றிடப்
போகுமப்பாபுனிதமாமிந்தநீற்றைச்,செகந்தனிற்செய்யமாட்டா
ர்சேப்பினேனுலகத்தோர்க்கு, நிகண்டதுபோலாநூலை நுணுக்க
மாய்நிகழ்த்தினேனே... (௬௪)

நிகழ்த்தினே நுணுக்கமாகநினைவொடுபவழபற்பஞ், செகத்
தினிலாருங்காணார்செப்பினேன்சூட்சமாக, அகத்தினிலிருந்துகொ
ண்டேயாடலாங்கோடிவித்தை, மகத்துவமிந்நூல்போலவைத்திய
ங்கண்டிலேனே.. (௬௫)

வைரபர்ப்பம்.

கண்டதோர்வைரந்தன்னைக்கருத்துடனுரைக்கக்கேளு, பெ
ண்டுகள்சுரோணிதத்தைப்பேணிவார்த்தரைத்துபில்லை, நன்றதாய்
ச்செய்துலர்த்திநாடியேயோட்டால்மூடி, சென்றிடக்கெஜபுடத்
தில்தீர்க்கமாய்நீறிப்போமே..................................... (௬௬)

நீரியநீறதன்னை நினைவதாய் தேனிற்கொள்ள, வூறிடுந்தேக
மெல்லா முற்றதோர் வைரம்போலா, மாறிடுமேனியெங்கும் வச்
சிரகாயமாகும், கூறிடும்ரத்தமெல்லாங் கட்டியாய்நீற்றக்கேளே.()

இரத்நபர்ப்பம்.

கேளதுபவழப்புத்தை முன்போல வரைத்துக்கொண்டே
யாளதுகுகையாய்ப்பண் யதினுள்ளே லவைரம்வைத்துச், சூள

துசில்லுபோட்டுச் சுற்றியேசிலைகட்டி, நாளதுகுக்குடத்தி னுட்டி
டநீறிப்போமே .... (௬௮)

போமதுநீறிற்றானல் புவியினிற்காட்டவொண்ணு, தாமலே
திரத்னநீறு மதிகமாய்ச் சித்தர்செய்வார், நாமதுதிறந்து சொன்
னேம் நாட்டினின்மனுவோர்க்காக, வோமிதுக்கநுபானங்களறிந்
திடவுறுதியாமே .... (௬௯)

உறுதியாமிந்தநீற்று லொழிந்திடும்வியாதியெல்லா, மறுதி
யாம்பாஷாணத்தி னீரதையறையக்கேளு, சுருதியாமண்டத்தோ
ட்டைச் சுண்ணமா யூதிக்கொண்டு, கருதியேகுகையாய்ச் செய்து
கட்டியைப்பேணிவையே .... (௭௰)

பாஷாணபர்ப்பம்.

பேணியேவைத்தபின்புவெள்ளெருக்கதனைப்பேசி, வாணி
யாபாலைவிட்டே யதில்மேலேசில்லுப்பேட்டுப், பூணியேசிலைசெ
ய்து குக்குடம்புடமதாக, வாணியேயிடுவாயானல்மாசற்றபர்ப்ப
மாமே. .... (௭௧)

பற்பத்தினிடையேசூதம்பாச்சியேமூலைப்பால்விட்டு, நற்பு
டனரைத்துபில்லைஞயம்படவுலர்த்திக்கொண்டே, யுற்பனவோட்
டில்வைத்தேயுபாயமாய்ச்சீலைசெய்து,கற்பகக்களிற்றைப்போற்றி
குக்குடங்கருதிக்கொள்ளே.. (௭௨)

கொள்வதுநீற்றைநன்றாய்க்கூறுவேன்வெள்ளியத்தி, லள்வ
துபலந்தனக்குப் பணவிடைவீதமாக, வுள்வதுவுருகும்போது
கொடுத்திடவுரிந்துகொள்ளு, மௌ்வதுதுய்யரூபாய் விலையதற்க
திகந்தானே.. (௭௩)

தானெனசுரத்துக்கெல்லாம்பாலினிற்றுக்கினுக்கா, லானெ
னநாழிகைக்குள் குளிர்சுரமோடிப்போகு, நானெனவிந்தநீற்றை
நாட்டினிலுணாக்கொணுது, பானெனதெளிந்தநூலைப் பத்திரப்ப
டுத்திவையே.. (௭௪)

சாரநீறு.

வைத்திடுஞ்சாரநீற்றைமைந்தனேமகிழ்ந்துகேளா, யெத்
திடும்புளியஞ்சாம்பலெடுத்ததைப்பாய்க்காய்ச்சி, சுத்திடுங்குப்
பைமேனிச்சாறுவிட்டரைத்துநன்று, யத்திடும்குகையுண்டாக்கிய
தினுள்ளேவைத்துமூடே.. (௭௫)

மூடியுமதனாற்செய்துமுசியவேசிலைகட்டி, யாடிடக்குக்கு
டத்திலழகதாய்நீறுநீறுந், தேடினூற்கிடையாதிந்தச்செகந்தனிற்
சாரபற்பம், வாடிடும்வாதியேகேள்வகையுடனீற்றுவாயே...(௭௬)

வாயதுபேசினுக்கால்வாய்க்குமோசாரநீறு, நோயதுகொ
ண்டவாதிசாரத்தினுணுக்கங்கேளு, காயதுநாகந்தானுங்கண்டிறந்
தாடிச்சாகும், பேயதுகொண்டவாதிபேசாதேபேணிப்பாரோ. ()

பாருள்ளநோய்கடீரப்பாய்ச்சிடுதேனிலேதான், சீருள்ளம
கோதரங்கள்வாயுவின்றிரட்சியோடு, நீருள்ளவாம்பல்வீக்கநிட்சய
கர்ப்பரோக,மூருள்ளகுன்மமெல்லாமோடிடுமுலகத்தோர்க்கே()

உப்புப்பர்ப்பம்.

உலகத்திலுப்பினீற்றையுரைக்கிறேனுறுதியாகச், சிலம்பெ
ற்றலவணந்தன்னைச்சிறந்தவோர்கட்டிவாங்கி, மலைபெற்றவன்னிப்
பட்டையிடித்ததைமாவதாக்கி, நிலைபெற்றவோட்டிலிட்டு நேர்ந்
துப்பைநடுவேவையே.................................. (௭௯)

வைத்தோர்கட்டிமேலேவன்னிதன்பட்டைத்தூளை, யுத்
ததோர்கீழ்மேலிட்டேயோட்டின்மேலோடுமூடி, முத்தவேசிலை
செய்துமுன்பிடங்கோழியிட்டே, யத்தபின்னெடுத்துப்பார்க்கவ
திகமாம்பற்பமாமே ....(௮௰)

அதிகமாம்பற்பந்தன்னை யருந்திடத்திசைவாய்வெல்லாம்,
பதியைவிட்டோடிப்போகும்பாரிசவாய்வுசூலை,கதிகெட்டமகோ
தரங்கள்கனத்திடுநீர்தோஷங்கள், மதிகெட்டேயோடிப்போகு ம
கிழ்வதற்கின்னமுண்டோ.................................(௮௧)

உண்டெனவுரைத்தசெய்தியுறுதியாய்ச்சொல்லக்கேண்மி,
னண்டர்கள்போலாமிந்தவதிசயமுப்புநீறு, தெண்டிசைமுழுதும்
வாழச்செப்பினேன்பற்பந்தன்னை, யுண்டிடவெள்ளிச்செம்பிற் க
ளஞ்சதற்கொருமாவீயே.................................... (௮௨)

ஆய்ந்திடவயனைதந்தாகுமெடுத்திடவாணிக்கெல்லாந், தேய்
ந்திடவறுத்தாயானுற்றெளிந்திடுந்தங்கமாகுங், காய்ந்திடுங்கசடரு
க்குக்காட்டாமலிந்தநூலை, யாய்ந்திடும்பெரியோர்க்கீந்தாலறம்வ
ருமதிகமாமே...(௮௫)

ஆமையோட்டினீறு.

ஆமையோடதனை நீற்றவருடனேச்சொல்லக்கேளு, பூமிவேரிதனையரைத்துப்பொருந்திடக்கவசஞ்செய்தே, யாமிதையதனுள் வைத்தேயழகதாய்ச்சில்லுப்போட்டுத், தாமுமேகுக்குடத்திற்றாக் கிடத்தவளநீறே.. (அச)

நீதவளமாநீற்றலான சகஸ்திரபிராணிநீற்றுறக், கவளமாய்த் தேனிலிட்டாற்கண்களுய்த்தொண்ணூற்றாறு, மூவளமாயோடிப்போகுமூசல்கண்ரோகந்தீரும், பவளமாமிந்தப்பற்பம்பாரினிலதிகந்தானே.. (அரு)

முத்துநீறு.

தானெனுமுத்துநீற்றைச்சாற்றுவேன்றரணியோர்க்கு, மானெனு மண்டநீரால் மகிழ்ந்தரைத் துண்டைசெய்து, நானெனவோட்டில்வைத்து நாடியேசீலைமூடி, வானெனகுக்குடத்தில் வைத்திடச்சுண்ணமாமே.. (அசா)

சுண்ணமாமுத்துநீற்றைவெற்றிலைத்தன்னிற்பூசி, யன்னமே தாம்பூலத்தை யருந்திடவதிகமாகு, முன்னமே பல்லிறுக்குஞ் சிலேற்பனமுழுதுந்தீரும், வன்னமாந்தேகத்துக்கு வாய்த்திடுஞ்சுண்ணமாமே.. (அஎ)

கர்ப்பூர நீறு.

வாய்த்திடும்பிரமேகங்கள் வந்தநீரழிவுதீருஞ், சாய்த்திடுங் கற்பூரத்தைச் சாற்றுவேன்சுண்ணமாக்க, காய்ந்தகற்பூரவள்ளிச் சாறது வார்த்தரைத்துத், தோய்த்திடும் வட்டதாக்கி ரவியினிற் காயச் சொல்லே.. (அஅ)

சொல்லியவட்டவோட்டில் துலக்கவைத்தோடுமூடி, நல்லதோர்சீலைசெய்து நாட்டியேபுடந்தான்கோழி, மெல்லியேயெடுத்துப்பார்த்தா லிய லுள்வச்சுண்ணமாகும், வல்லிவெற்றிலையிற்றின்றால் வச்சிரகாயமாமே.. (அகூ)

காயமும்வலுத்துப்போகுங்கசடதுமற்றுப்போகும், வாயினில்ரோகந்தீரும் வருந்தியகபமுமேகு, மாயமாம் வாய்வுபோகு மலசலக் கட்டுந்தீரும், நேயமாய்க் கண் துலங்கும் நிச்சயமிது சொன்னேனே.. (கூய)

...மணிசசா...

தினுள்ளேவைத்து......

5/ 5

துரிசிபர்ப்பம்.

நிச்சயமாகச்சொல்வே னீலமாந் துரிசிப் போக்கு, வைச்சு தோர் வங்கத்தோடே யிடைக்கிடை சூதம்வார்த்து, மெச்சுமந் திடைக்குநல்ல வெடியுப்புங்கூடக்கூட்டி, யுச்சவாய்நீரினாலே யுறவ ணாத்துலர்த்திவட்டாய் ....(௬௧)

வட்டமாயோட்டில்வைத்து வளையவேசீலைசெய்து, திட்ட மாய்க்குக்குடந்தான் றீர்ந்திடச்சுண்ணமாகு, முட்டவேசிவந்து போனால் மூறைப்படியுப்பைக்கூட்டிச், சட்டமாயரைத்துமூன் போற் புடமிடச்சுண்ணமாமே.......................................(௬௨)

சுண்ணத்தைவாய்நீராலேசுழற்றியேயரைத்துக்கொண்டே, யன்னத்தைத் துரிசிக்கட்டிக் கப்பியேரவியிற்போட, முன்னைத் தமூன்றுநாளில்முழுவெள்ளையாகும்பாரு, பொன்னைத்தசீலைசெ ய்துபோட்டிடுகோடையென்றே......................................(௬௩)

என்றிதையெடுத்துப்பார்க்க வியலுள்ளச்சுண்ணமாகுங், க ண்களாற்கண்டபேர்க்குக் கலியெலாநீங்கிப்போகும், பண்டிதை ரசத்திற்குக்கால் பணவிடைதாக்கினுக்கா, லுண்டதுகொண்டுபோ மே யுறுதியாம்வாய்நீராலே ....(௬௪)

வாயினிலுமிநீராலே மத்தித்தேயுருட்டிமெள்ள, காயினிலு மியோட்டுள்ளே தரியினிலுருக்கிக்கொண்டு, வாயினிலாயிபாதந்த ன்னையேவணங்கிநித்தங், காயினிலிதனைக்கொண்டேயாடலாங் கோ டித்தானே ....(௬௫)

கோடியென் றுரைத்தேன்கேளாய் கோடியுமிதற்குள் ளா கும், வாடியேமயங்க வேண்டாம் வைத்திடுதுரிசிச்சுண்ணந், தே டினூற்கிடையாதப்பா தெருவெல்லாங்கிடைக்குமோசொல், பாடி யும்படித்துமென்ன பாரினினூற்கிட்டாதே ....(௬௬)

இட்டாமற்போனதேதோ கிடைத்தவர்கொடுக்க மாட்டார், கட்டாகத் தந்தபேர்கள் காலினில்விழுந்து போற்றுச், செட்டாக விருக்கலாகாதிரவியஞ்செய்வதென்ன, முட்டாளாய்ப்போகாமற் றுன் மூனாயதாய்க்குருவைவாங்கே..............................(௬௭)

பொன்னிமிளைபர்ப்பம்.

வாங்குபொன் னிமிளைபர்ப்பம் வளமதாய்ச்சொல்லக் கேளு, தாங்கியவரசல்பட்டை தூளதாயிடித்துக்கொண்டு, காங்கிசை கீழ்மேலிட்டுக் கட்டியை நடுவே தூக்கி, யோங்கியே யோட்டில் வைத்தே யதன்மேலேயோடுமூடே.................... (கூஅ)

மூடியேசீலைசெய்து முக்யமாய்கெஜபுடத்திற், சாடியே நீறிப்போகுந் தவளம்போல்வெண்மையாகும், கூடியவாய்வுரோகங் குலைகுலைந் தோடிப்போகும், நீடியகுன்மமெட்டும் நிலைகுலைந் தேகுங்காணே .... (கூகூ)

காணவேகுலைக்கட்டு கண்டவிப்பிருதிமாலை, பூணையாப் புபுத்துக்கோகோநெய் தேனிற்கொள்ளு, தோணவேதங்கநீறைச் சுளுவாகவென்றுசொல்வேன், நாணவேசூரிவித்தை நாவினிலுமிநீராலே. .... (ா)

தங்கபர்ப்பம்.

நிரிணலாைத்துத்தங்கக்காசுமேற்பொருந்தியோட்டில், தாரியேவைத்துமூடிச் சந்துவாய்ச்சீலைசெய்தே, பூரிணற்கெஜபுடத்தி லுயர்த்தியாய் நீறிப்போகும், பேரிணலிந்தநீற்றைப் பேசொணுதறிந்தபேர்க்கே .... (ாக)

வேறு.

பேர்க்கென்றவகையேது சொல்லக்கேளு - பெயர்கெட்டவுலகுக்குப் பொருளேகாணு, மாக்கென்றதங்கபர்ப்ப மொருமாவாக - வப்பனேரவிமதியி லீந்தாயானல், ஊக்கென்ற விராகனுக்கே யதிகக்காணு - முறப்புள்ளதங்கமடா யிந்தப்போக்கு, நாக்கென்றசரச்சோதி நிருத்தஞ்செய்வாள் - நாதாக்கள்செய்கின்ற வித்தைதானே .... (ாஉ)

வித்தையென்றவித்தையெல்லா மிருநூற்றுள்ளே - விருதுகட்டிவெட்டுதற்குச் சுளுவுமெத்த, சுத்தென்றசுத்தெல்லாம் விட்டுப்போட்டுச் - சுளுவானவித்தைதனை யாடித்தேறு, பத்தென்றநூறுமது முகிந்தவாறைப் - பாடினேனின்னமொரு நூறும்பாரு முத்தென்றமுத்துபோல் மூலிபோக்கு - முக்கியமாய்ச்சொல்லுகிறேன் மறையைப்பாரே. .... (ாங)

முறையான யேகமூலிகையினாலே - முக்கியமாயெண்ணே யொடு நெய்க்கியாழந், துறையான துறையெல்லா மிதற்குட்சொன்னேன் - சுளுவாகத்தைலங்கள் சூரணங்கள், பறையென்றபறை போட்டேன் வியாதிகளெல்லாம் - பண்பதுபோற்றுலங்கிவிட்டேன் பலநூலுள்ளே, நிறையான துறையெல்லாஞ் சுருக்கிச் சொன்னே - னிட்சயமாய் நூற்றுக்கு னிகர்காணேனே............ (௱௪)

மேகத்துக்குத் தைலம்.

நிகரில்லாமேகத்தின் றைலங்கேளு - நிசமானசந்தனமு மிலாமிச்சோடு, வகையாகவாவிரையின் பட்டைதானும் - வளமாகப் பலம்பத்துநிறுத்துத்தூக்கிப், புகையாமற்றாணிநீரெட்டென்றாக்கிப் - புகழூற்றக்கியாழத்தையிறுத்துக்கொண்டு, நகையாமலெள்ளெண்ணெய் நாழிவிட்டு - நரிகிண்டி வேர்பலந்தா னரைத்துப் போடே.. (௱௫)

போட்டதனைக்காய்ச்சியே மெழுகதானாற் - புண்ணியனே வடித்திட்டுப் புகலக்கேளு, நாட்டினிலேமுழுகிவர மேகந்தீரும்-நளினமாந் திரேகமுமே யிறுகிப்போகும், பூட்டென்ற மேகநீர் போகவேண்டிப் - புனிதமாமருந்தொன்று சொல்வேன்மைந்தா, சாட்டதனைமுன்சொன்ன பர்ப்பந்தன்னித் - சார்வாகக்கொடுத்துவிடு சாந்தமாமே.. (௱௬)

வில்வவேர்த்தைலம்.

சாந்தமாம்வில்வையுட தைலங்கேளு - தானானவில்வைவேர் பலந்தான்பத்து, பாந்தமாயிடித்ததனைப் பதக்குநீரிற் - பருவமாய்க்காய்ச்சியே யெட்டொன்றாக்கிப், போந்தெண்ணெய் நாழியிலே பலந்தான்சந்தம் - புகழாகக்கியாழத்தி லரைத்துப்போட்டுச், சேர்ந்ததோர்தைலமது மெழுகதானாற் - சிறப்பாகமூழ்கிவர வளமைகேளே .... (௱௭)

வளமையுடன்முழிகிவரப் பித்தம்போகும் - வரிசைபெற்ற மெய்யிதுள்ள வுஷ்ணமேகு, மிளமைபெறவாக்கிவைக்கு மேகம்போகு - மிருகண்ணுந்தெளிவுதரு மிருமல்தீரும், உளமதனிற்பித்தமெல்லாமோடிப்போகு - முள்வரட்சியுட்சுரங்களொழிந்துபோகுந், தளமாகச்சூட்சமாந் தைலஞ்சொல்னேன் - றளராமற்பாரு நீ தரணியோர்க்கே .... (௱௮)

வேங்கைத்தைலம்.

தரணியுள்ளமானிடர்கள்பிழைக்கவேண்டிச் - சாற்றுகிறேன்
வேங்கையது தைலந்தன்னைக், காணியமாய்ப்பலம்பத்துத் தாக்கி
க்கொண்டு - காய்ச்சிவிடுதூணிநீ ரெட்டொன்றாகத், திரணியுள்ளகி
யாழத்தை வடித்துவாங்கித் - திறமானவிலாமிச்சுப்பலமொன்றாக
வரணியமாய்க்குடிநீரி லரைத்துப்போட்டே - வளமாகமெழுகுப
த மானவாறே.. (௱௯)

வாறாகமுழுகிவர வகையைக்கேளு - வாதமொடு சூலைகளு
மாண்டுப்போகும், பேறாகப்பித்தமெல்லா நடுங்கியோடும் -பீனி
சமுமண்டையிடிபிரட்டற்சத்தி, வீறான விக்கல்முதலுடனேபோ
கும் - மெய்யெல்லாங் காந்திபுண்டாம் விழிரோகம்போம், நாறு
ளும் பின்சொன்னத் தைலப்போக்கு - நுணுக்கமாம் பர்ப்பத்தின்
போக்குநாறே... (௱௰)

வெட்டிவேர்த்தைலம்.

போக்கானசேதியொன்று சொல்லக்கேளு - புகழானவெ
ட்டிவேர்பலந்தான்பத்து, நோக்காகவிடித்ததனைப்பதக்குநீரி- னு
ணுக்கமாய்க்காய்ச்சியே யெட்டொன்றாக்கி, வாக்காகவடித்ததனி
லெண்ணெய்நாழி- வளமையாயதிமதுரப்பலந்தானென்று, தாக்
கான வெண்ணெய்க்கு ளரைத்துப்போட்டுச் - சாதகமாய்மெழுகு
பதந்தன்னில்வாங்கே.. (௱௰௧)

வாங்கியேமுழுகிவரவரிசைகேளு- மாநிலத்தின் மனிதர்கட்
குமண்டைச்சூலை, யோங்கியேகுஷ்டமொடுபிறநீர்க்கோவை-யொ
ழிமருளுங்கண்புகைச்சற்காதுமந்த,மேங்கியேபுளைப்பிளைப்புமே
ற்கால்நோயு- மியல்கெட்டதாதுசய மெரித்தற்காந்தல், நீங்கியே
போவதற்கோர்மண்டலந்தா- னேராகவொன்றைவிட்டே யொரு
நாளென்னே.. (௱௰௨)

வேம்பின்பட்டைத்தைலம்.

என்னவென்றேயின்னமொருதைலங்கேளா- யினிதானவே
ம்பினிடபட்டைவாங்கி, யுன்னவென்று கால்துலா மிடித்துக்கொ
ண்டே- யொருதூணிநீரதுதான் வார்த்துக்காய்ச்சி, சொன்னதெ
ன்னவெட்டொன்றாயிறுத்துமெள்ளச்-சுருதிபெறவெண்ணெயிரு

நாழிவிட்டு, நன்னயமாமேலமதின்பலமிரண்டு- நலமானகியாழ
த்திலரைத்துப்போடே.. (௱௰௩)

ஆனாத்துடனேகாய்ச்சிவிடுமெழுகதானுலாற்றியேவடித்த
தன்முழுகும்போது, நினைத்திட்டவாதமெல்லாமேங்கியோடு- நி
சமானசூலையொடுகுஷ்டரோகந், தினைத்திட்டநீரிழிவுமேல்கடுப்பு
ச்- செங்கரப்பான்புண்புரைகட்சிதறிப்போகு, முனைத்திட்டதைல
த்திலுறுதிமெத்த- வுத்தமனேவேறொன்றையுரைக்கிறேனே(௱௰௪)

குறுந்தொட்டித்தைலம்.

உரைக்கிறேன்குறுந்தொட்டிவேரைமைந்தா- வோர்நிறை
யாங்கால்துலாமிடித்துப்போட்டு, நிரைக்கிறேன்றூணிநீரொட்டொ
ன்றாக்கி- நேராகவெண்ணெயிருநாழிவிட்டு, கரைக்கிறேன்கியாழ
த்தாலரைத்துமைபோற்- கசகசாவிருபலந்தான்கண்டுக்கொள்ளு,
நரைக்கிறேனென்பதென்றவாதமெல்லா - நடுநடுங்கியோடுமடா
நயந்துகாணே.. (௱௰௫)

கொடுவேலிவேர்த்தைலம்.

நயமானகொடுவேலிபலந்தான்பத்து - நன்றாகவிடித்திட்டு
ப்பதக்குநீரில், வயமாயேசுவறக்காய்த்தெட்டொன்றாக்கி- வளமா
னநல்லெண்ணெய்நாழிவிட்டு, நியமாகபுல்லினக்காய்வெண்ணெய்
ப்போட்டு- நிலையானசீரகமும்பலந்தானென்று, ஜெயம்பெறவே
யரைத்ததனைப்பாகிற்சேர்த்துச்- சீரானமெழுகுபதமானவாறே()

ஆனதயிலம்வடித்து முழுகும்போதே - யானந்த வாயுவி
னோடனந்தம்வாய்வுந், தேனமருங்குழலாய்கேள்வாதத்தோடு - சி
றுசொரியுந்தினவுமுதற்சிரங்குகுட்டம், போனதென்ன வரையாப்
புக்கரந்திசூலை- புண்புரைகளோடுபொடிபிளவைவிக்க, நானென
வேவந்தனேப்பலவுந்தீரு- நல்லதொருதைலமிது நாடிப்பாரே ()

சீரகத்தைலம்.

பாரப்பாசீரகந்தான் படியோரண்டு - பதமாகவிடித்து நீர்
பதக்குவாத்துச், சீரப்பாவெட்டொன்றாய்க்கியாழம்வாங்கித்- தெ
ளிவாகவெள்ளெண்ணெய் படிதான்வாரு, காருறையுங் கார்ட்போ
கி பலமிரண்டு - கஷாயத்தாலரைத்ததனைக்கலக்கிச்சேர்த்தே, யே
ரவேமெழுகுபத மாயிறக்கி - யியல்பாகமுழுகிவரக் குணத்தைக்
கேளே.. (௱௰அ)

